THIRU K. M. SUBRAMANIAM: Are these plastic bags or bottles capable of being used for a second time? Can they be re-used?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அந்த பிளாஸ்டிக் பைகளை ஒருமுறை உபயோகித்த பிறகு இரண்டாவது முறையாக உபயோகப்படுத்த முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்.

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருக்கும் திருவாளர்கள் ஈ. எம். நடராசன், எம். ஆர். கண்ணன், துரைமுருகன், ந. கணபதி, முனு ஆதி, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோரின் பதவிக் காலம் 22—3—1973-ம் நாளுடன் முடிவடைய இருப்பதால், மேற்குறிப்பிட்ட ஆறு வெற்றிடங்களுக்கு, தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து அறுவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 6—3—1973 செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 7—3—1973 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 8—3—1973 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறு இடங்களுக்கு மேற்படின், 12—3—1973 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டப் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் பழைய ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.